இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 04.06.2026

# விஜய்க்கு நாவடக்கம் தேவை!

விஜய் இன்னமும் தேர்தல் கால மனநிலையில் தான் இருக்கிறார். முதலமைச்சராக ஆகிவிட்டோம் என்ற நினைப்பும் இல்லை. பொறுப்பும் இல்லை. அத்தகைய நினைப்பு இருந்திருந்தால் நேற்றைய தினம் திருச்சியில் தேர்தல் கால உரையை உளறி இருக்க மாட்டார். அந்தப் பொறுப்பு இருந்திருந்தால் நாவடக்கத்தோடு பேசி இருப்பார். ஆணவம் தலைக்கேறி பேசி இருக்கிறார் 'முதலமைச்சர்' விஜய்.

**தனது தோல்வியை தொடக்கத்திலேயே விஜய்யின் வாக்குமூலம் ஒப்புக் கொண்டது. 'இன்னும் கொஞ்சம் கூடுதலாக எனக்கு வோட்டுப் போட்டிருக்கலாம்' என்று உடலை நெளித்துக் கொண்டு அவர் சிரித்த சிரிப்பு அசிங்கமாக இருந்தது. 'எனக்கு ஆட்சி அமைக்கும் தகுதியை நீங்கள் வழங்கவில்லையே' என்பதை ஒப்புக் கொள்வதைப் போல இருந்தது அவரது பேச்சு. இப்படி அரைகுறையாக வெற்றிபெற்றவர் ஆணவத்தால் ஏன் கத்த வேண்டும்? அடக்கமாக பேசி இருக்கலாமே?**

ஆட்சி அமைக்கத் தேவையானது 118 இடங்கள். அவருக்கு கிடைத்ததோ 108 தான். ஆட்சி அமைக்கத் தேவையான பெரும்பான்மையே கிடைக்கவில்லை. தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணியில் போட்டியிட்டு வென்றவர்கள் ஆதரவு இல்லை என்றால் விஜய் ஆட்சி அமைத்திருக்க முடியாது. இப்படி இரவல் வாங்கி, கடன் வாங்கி, 'அவர்களுக்கு அமைச்சர் பதவி தருகிறேன்' என்று சொல்லி, கொடுத்ததால் தான் அவரால் பதவிப் பிரமாணமே செய்ய முடிந்தது. இல்லாவிட்டால் மறுபடியும் படத்தில் நடிக்கத்தான் போயிருக்க முடியும்.

**இந்த லட்சணத்தில் எம்.ஜி.ஆரை விட அதிகமாக வாக்குகள் வாங்கி விட்டாராம். தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறார் விஜய். தி.மு.க. கூட்டணியை விட 17 லட்சம் வாக்குகள்தான் அதிகம் வாங்கி இருக்கிறது விஜய் கட்சி. 16 இடங்களில் மிகக் குறைவான வாக்குகள் வித்தியாசத்தில் தான் வென்றுள்ளார்கள். 8 மாவட்டங்களில் விஜய் கட்சி எந்தத் தொகுதியிலும் வெற்றி பெறவில்லை. கடன் வாங்கி ஆட்சி அமைத்துவிட்டு மேடை போட்டு கனைக்க வெட்கமாக இல்லையா?**

**'தி.மு.க.வுக்கு த.வெ.க.வுக்கும் தான் போட்டி' என்று சொல்லிக் கொள்ளும் விஜய், அ.தி.மு.க.வை 'மற்றும் பலர்' என்றுதான் சொல்கிறார். மற்ற கட்சிகளை எல்லாம் 'அல்லு சில்லு கட்சிகள்' என்றும் சொல்கிறார். அவர் பாணியில் சொல்வதாக இருந்தால், 'அல்லு சில்லு' கட்சிகளை வைத்து எதற்காக ஆட்சி அமைத்தார்? வெட்கமாக இல்லையா?**

தேர்தலுக்கு முன்னதாக 'கல்லாப்பெட்டி' கூட்டணி என்று தி.மு.க. கூட்டணிக் கட்சிகளை கொச்சையாகப் பேசியவர், இப்போது 'அல்லு சில்லு' என்கிறார். இதை விட ஆணவம் இருக்க முடியுமா?

'மற்றும் பலர்' என்று அ.தி.மு.க.வைச் சொல்லும் இதே விஜய், அந்த 'மற்றும் பலர்' வீட்டுக்கு பல்லிளித்துக் கொண்டு ஏன் போனார்? சி.வி.சண்முகம் வீட்டுக்கு போகும் போது, அவர்கள் மற்றும் பலராக இல்லாமல் 'மாமன்' வீடாக இருந்ததா? அ.தி.மு.க.வின் இரட்டை இலை சின்னத்தில் வெற்றி பெற்ற 25 பேர் ஆதரவைக் காட்டித்தான் சட்டமன்றத்தில் 144 உறுப்பினர் ஆதரவு என்று காட்டியது கயமைத்தனம் அல்லவா?

**அமைச்சர் பதவி தருகிறேன், வாரியத் தலைவர் பதவி தருகிறேன் என்று சொல்லி வாக்குப் போட வைத்து விட்டு, அவர்களையும் கைகழுவி விட்டது விஜய் செய்த அசிங்க அரசியல் அல்லவா? கொறடா உத்தரவை மீறி வாக்களித்தால் பதவி போகும். அது தெரிந்தும், அவர்களை ஏமாற்றி வோட்டுப் போட வைத்தது நாற்றமெடுத்த செயல் அல்லவா? இவை அனைத்தையும் செய்து விட்டு, 'குதிரை பேரம் இல்லை' என்று சொல்வதற்கு கூச்சமாக இல்லையா?**

முதலமைச்சராகப் பொறுப்பேற்று 20 நாள் ஆகிறது. முதல் நாளில் மூன்று கையெழுத்துகள் போட்டார். அதைக் கூட ஒழுங்காகச் சொல்லத் தெரியவில்லை. ' அனைவருக்கும் 200 யூனிட் இலவசம்' என்று முதலில் சொல்லி விட்டு, '500 யூனிட்டுக்குள் பயன்படுத்துபவர்களுக்கு' என்று இப்போது சொல்லி இருக்கிறார். முதல் கையெழுத்தே மோசடிக் கையெழுத்துதான்.

**தமிழ்நாட்டில் உள்ள அத்தனை டாஸ்மாக் கடையையும் மூடிவிட்டதைப் போலச் சொல்லி இருக்கிறார் விஜய். சில கடைகளை மூடிவிட்டு, பல பார்களை திறந்துவிட்டதால் பல்வேறு ஊர்களில் பெண்கள் போராடி வருகிறார்கள். இதெல்லாம் விஜய்க்குத் தெரியாதா? சிங்கப் பெண் திட்டத்தை தொடங்கப் போவதாகச் சொல்லி இரண்டு முறை தள்ளிப் போட்டுள்ளார்கள். 'நெக்ஸ்ட் வீக்' என்கிறார் விஜய். எவ்வளவு வீக் ஆக ஆட்சி நடத்துகிறார் என்பதற்கு உதாரணம் இது.**

நாடு முழுக்க மின் வெட்டு. இருட்டில் போராடுகிறார்கள் மக்கள். பல இடங்களில் உரிய நேரத்துக்கு பேருந்துகள் வரவில்லை. மதுபானக் கடைகளுக்கு எதிராக மறியல். மின் கட்டண மோசடியைப் போலவே பயிர்க் கடனிலும் தில்லுமுல்லு செய்தார் விஜய். மாநிலம் முழுவதும் விவசாயிகள் போராடுகிறார்கள். பாலியல் வன்கொடுமைச் செய்தி வராத நாளே இல்லை. த.வெ.க. நிர்வாகிகளின் அடிதடி, பட்டாக்கத்தி அக்கிரமங்கள் வீடியோக்களாக வெளியாகி வருகிறது. இவை எதற்கும் பதில் இல்லை.

**மேகதாது அணை பிரச்சினை. திருவள்ளுவருக்கு காவி. தமிழ்த்தாய் வாழ்த்து சர்ச்சை. பெட்ரோல் மற்றும் டீசல் விலை உயர்வு. மின் வெட்டு பிரச்சினை. மும்மொழித் திணிப்பு. இவை எதைப் பற்றியும் பேசவில்லை. பழைய படத்தை மீண்டும் எடுப்பதைப் போல பழைய பேச்சையே திரும்பப் பேசி இருக்கிறார் விஜய்.**

'கவர்ச்சியைப் பார்த்து வோட்டு போட்டாங்களாம். நாங்க என்ன....' என்று நிறுத்தியது கேவலத்தின் உச்சம். அவரது ஆரம்ப காலப் படங்களை அவர் பார்க்கட்டும்.

**'எனக்கு ஏதாவது வாயில வரப்போகுது' என்கிறார் விஜய். இதை விட தரங்கெட்ட வார்த்தைகள் இருக்க முடியாது. அவரது ஆட்சியைப் பற்றி மக்கள் வாயில் என்ன வருகிறது என்பதற்கு ஆயிரக்கணக்கான வீடியோக்கள் இணையதளங்களில் இருக்கிறது. அதைப் போட்டு பார்த்து கேட்டால் அவருக்கு ஆணவம் குறையலாம்.**




கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு, சென்னை அண்ணா அறிவாலயத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி வணங்கினார்.

## கலைஞர் மீதான பற்றால் பிறந்தநாளையே ஒரு நாள் முன்னதாக மாற்றிக் கொண்டவர்!

# ராஜா என்றும் ராஜாதான்!

## இசைஞானி இளையராஜா பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!



**சென்னை, ஜூன் 4 -**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இசைஞானி இளையராஜா அவர்களின் பிறந்தநாளையொட்டி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் 'ராஜா என்றும் ராஜாதான்' என்று வாழ்த்தியுள்ளார்.**

அவரது வாழ்த்துச்செய்தி வருமாறு:-

**இசையால் நம்மை என்றென்றும் ஆளும் இசைஞானிக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்!**

**தலைவர் கலைஞர் மீது கொண்ட மதிப்பின் காரணமாகத் தனது பிறந்த நாளையே ஒரு நாள் முன்னதாக மாற்றிக் கொண்டவர். 'இசைஞானி' என்று தலைவர் கலைஞர் பட்டம் சூட்டினார்.**

**அன்னக்கிளியில் தொடங்கி சிம்பொனி வரையிலான ராஜாவின் ராஜாங்கம் தொடரட்டும்.**

**ராஜா என்றும் ராஜாதான்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

# திரைப்பட இயக்குநர் மணிரத்னம் பிறந்தநாள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து!

**சென்னை, ஜூன் 4-**

**திரைப்பட இயக்குநர் மணிரத்னம் பிறந்தநாளையொட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளார்.**

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:



ஒவ்வொருநாளும்தன்னைப் புதுப்பித்துக் கொண்டு, தணியாத தாகத்துடன் சினிமாவை அணுகும் இயக்குநர் மணிரத்னம் அவர்களுக்குப் பிறந்த நாள் வாழ்த்துகள்!

அவரது பேரார்வம், புதிதாக வரும் இளைஞர்களுக்கும் பாடம்!

மனித மனங்களின் ஆழத்தை அழகுணர்ச்சியோடு வெளிப்படுத்தும் மேலும் பல படைப்புகளைத் மணிரத்னம் அவர்கள் வழங்கி மகிழ்விக்க விழைகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழக அரசைக் கண்டித்து விவசாயிகள் ஆர்ப்பாட்டம்!

ராணிப்பேட்டை, ஜூன் 4-

விவசாயக் கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யாத விஜய் அரசைக் கண்டித்து ராணிப்பேட்டையில் விவசாயிகள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

அப்போது பெண்கள் ஒப்பாரி வைத்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்யக்கோரி ராணிப்பேட்டை முத்துக்கடை பஸ் நிறுத்தம் அருகே தமிழக விவசாயிகள் சங்கத்தினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# திருவள்ளூர் மத்திய மாவட்டத்தில் கலைஞர் பிறந்த நாள் விழா!

திருவள்ளூர், ஜூன் 04–

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் பூவிருந்தவல்லி நகரத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது.

மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்களான ஆர். செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, அக்னி ராஜேஷ், டி. பிரியாகுமார், எஸ். சதீஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கினார்.

அப்போது, தமிழ் மொழி, சமூக நீதி, பகுத்தறிவு மற்றும் திராவிட இயக்கக் கொள்கைகளுக்காக வாழ்நாள் முழுவதும் பாடுபட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாவட்டம் முழுவதும் இளைஞர் அணி சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குதல், மரக்கன்றுகள் நடுதல், மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்குதல், பொதுமக்களுக்கான நலத்திட்ட முகாம்கள் நடத்துதல் உள்ளிட்ட மக்கள் பயன் பெறும் நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்திட வேண்டும் என அறிவுறுத்தினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளையும் கழக , தலைவர் அவர்களின் வழிகாட்டுதலையும் மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையில் அனைத்து பகுதிகளிலும் சிறப்பான நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்

தொடர்ந்து பேசிய அவர், வருகின்ற காலங்களில் இளைஞர் அணி நிர்வாகிகள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை அடிப்படையில் உண்மையாக உழைத்தால், உரிய பொறுப்புகளும் பதவிகளும் உங்களைத் தேடி வரும். அதற்கான வாய்ப்புகளையும் ஆதரவையும் கழகம் வழங்கும் என தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து, பூவிருந்தவல்லி பகுதியைச் சேர்ந்த பல்வேறு மாற்றுக் கட்சியினர், நகரச் செயலாளர் ஜி.ஆர். திருமலை மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே. சுரேஷ்குமார் நகர இளைஞர் அணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனீப், ஆகியோர் ஏற்பாட்டில், மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு. நாசர் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் மாநில ஆதிதிராவிட நலக்குழு அணி அமைப்பாளர் ஆ.கிருஷ்ண சாமி, மாநில மாவட்ட நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ், ஜி.விமல் வர்ஷன், ஜெ.மகாதேவன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## வாட்ஸ் அப்பில் வலம் வருகிறது!

